ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/45 - 2016 ජනවාරි මස 01 වැනි සිකුරාදා - 2016.01.01

*1947/45 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம், அப்பிரிவின் கீழ் 2006 ஆம் ஆண்டு ஒத்தோபர் மாதம் 05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் இறுதியாக திருத்தியமைக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 1933/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையினை, 2016, சனவரி 1 ஆந் திகதி முதல் பயன் வலுப்பெறும் வகையில் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் உள்ளது போன்று திருத்தியமைக்கின்றேன்.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, திசெம்பர் 31.*

***அட்டவணை***

*1465/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் 05 ஆனது பின்வரும் விடயம் 05 இனைக் கொண்டு பதிலீடு செய்வதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது.*

*''05. 2016, சனவரி 1 ஆந் திகதியின் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் ஒரு காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும் கடன் அட்டையொன்றின் மூலமான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும், கடன் அட்டையைச் சமர்ப்பித்து மேற்கொள்ளப்படுகின்றதா அல்லது சமர்ப்பிக்காமல் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதைக் கவனத்திற் கொள்ளாது, அதன் விற்பனை நாடு (பொருட்கள் அல்லது சேவைகளின் கொள்வனவு அல்லது பணம் மீளப்பெறுதல் இடம்பெறும் நாடு) இலங்கையல்லாத வேறு ஒரு நாடாக இருக்கும் சந்தர்ப்பத்தில், சேவைக் கட்டணங்கள் உள்ளடங்காது, ஏதேனும் ஒரு தொகைப் பணத்தை ஏதேனும் நாணயத்தில் செலுத்துமாறு முன்வைக்கப்படும் ஏதேனும் உரித்துக் கோரல், வேண்டுகோள் அல்லது கோரிக்கை*

*அத்தொகையின் ஒவ்வொரு 1000 ரூபாவுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கும்''*     *ரூபா 25.00*

*1- 621*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.